13.08.2026

அ.வ.எண்.86/2020

<u>வா.சா.3 அப்துல் அக்கீம், பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. தாவாசொத்தை நான் எப்போது கடைசியாக பார்த்தேன் என்றால் 6 மாதத்திற்கு முன்பு பார்த்தேன். தாவாசொத்தை வீட்டு மனையாக பிரித்து விற்பனை செய்துவிட்டோம் என்றால் சில மனைகளை விற்றுவிட்டோம், மேலும் சில மனைகள் எங்கள் அனுமதியில்லாமல் 1ம் பிரதிவாதி விற்றுவிட்டார். எனவேதான் மேற்சொன்ன கிரைய பத்திரத்தை ரத்து செய்ய இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். எத்தனை மனைகளை விற்றுவிட்டோம் என்றால் 27,000 சதுரடி அளவில் ஏற்பட்ட மனைகளை விற்று அந்த தொகையை 1ம் பிரதிவாதிக்கு கொடுத்துவிட்டோம்.

2. வாதி விற்பனை செய்த மனைகளை வாங்கிய கிரையதாரர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளோமா என்றால் நாங்கள் விற்பனை செய்த கிரையதாரர்களை சேர்க்கவில்லை, 1ம் பிரதிவாதி சில மனைகளை விற்பனை செய்தார், அந்த கிரையதாரர்களைதான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளோம். தாவாசொத்தில் வீட்டு மனை வாங்கிய நபர்களில் எத்தனை நபர்கள் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் எங்களிடம் மனை வாங்கிய நபர்கள் நான்கு பேர் வீடு கட்டியுள்ளனர், 1ம் பிரதிவாதியிடம் வாங்கிய நபர்கள் யார் வீடு கட்டினார்கள் என்று எங்களுக்கு தெரியாது. இன்றைய தேதிவரை கிரைய ஒப்பந்தத்தின்படி வாதி பிரதிவாதிக்கு பணத்தை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி

கொடுத்துவிட்டார், அதற்குரிய ஆவணங்களை வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். தாவாசொத்தில் வாதி எந்த காலத்திலும் அனுபவத்தில் இருந்தது கிடையாது, எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.